மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாநில சுற்றுலா வாரியத்தின் சார்பில் இப்போதே ஒரு திட்டம் 15 லட்சம் ரூபாய் செலவில் நடுத்தர மக்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு சுற்றுலா பயணிகள் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான இடத்தைச் காட்டிலாகாவில் இருந்து பெறுவதற்காக, அனுமதிக்காக சுற்றுலா வாரியம் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் பயிற்றுநர்கள்.

*306 வினு— சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியரசுத் தலைவர் ஆட்சியில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு மூலமாக நியமனம் செய்யப்பட்ட தமிழ் பயிற்றுநர்களை நீக்கியது உண்மையா?

(ஆ) அதன் காரணம் என்ன ?

(இ) அப்படி பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் நியமனம் செய்ய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ). இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சின்னசேலம் திரு. மா. சுப்பிரமணியன் : தாற்காலிகமாக அரசுத் துறையில் நியமனம் செய்யப்படுகிறவர்கள் நீக்கப்படும் போது எந்த அடிப்படையில் நீக்கப்படுகிறுர்கள்? அரசுப் பணித் தேர்வு ஆணைக் குழு மூலமாகத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் தாற்காலிகமாக நியமிக்கப் பட்டவர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட புகார்கள் எம்.எல். ஏக்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் எந்த அடிப்படையில் நீக்கப் படுகிறுர்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறுர்களோ அந்த அடிப்படையில்தான் நீக்கப்படுகிறுர்கள்.

திரு. ரா. மார்க்கப்பந்து : குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் கல்வித் தகுதி இல்லை, வயது வரம்பு சரியில்லை என்ற காரணத்தைக் காட்டி யார் யார் நியமிக்கப் பட்டிருந்தார்களோ அவர்களை எல்லாம் ஒரே

1978 பிப்ரவரி 28]

யடியாக நீக்குகிற உத்தரவைப் போட்டிருந்தார்கள். அது இப்போது அமலுக்கு வந்து கொண்டிருக்கும் காரணத்தால், ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டு காலம் அரசாங்க உத்தியோகத்தில் வேலே செய்து கொண்டிருந்தவர்கள் கூட வேலேயிலிருந்து நீக்கப்படுகிருர்கள். அதன் காரணமாக அவர்கள் அரசாங்கத்தோடு போராடி நீதிமன்றத்தைக்கூட நாட வேண்டிய நிலேமை இருக்கிறது. அந்தக் கஷ்டங்களை நீக்க மனிதாபிமான அடிப்படையில் யார் யார் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்களை ரெகுலரைஸ் செய்ய, முறைப்படுத்த இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலேவர் அவர்களே, அரசாங்கம் செயல்படுவதற்குரிய சட்டங்கள், விதிகள், இருக்கின்றன. அவைகளுக்கு உட்பட்டுத்தான் நாங்கள் உத்தரவுகளைப் போட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. க. சுப்பு : தலேவர் அவர்களே, உயர்நிலேப்பள்ளிகளிலே பணியாற்றுகின்ற தகுதி பெற்றவர்களை கல்லூரிகளுக்கு புரமோஷனில் பயிற்றுநர்களாக நியமனம் செய்கிருர்கள், ஆனல் அவர்களுடைய பணியை ரெகுலரைஸ் செய்ய அரசாங்கம் தவறிவிட்டது. ஆறு ஆண்டுக் காலம் வரையில் பணியாற்றியவர்கள் திரும்பவும் உயர்நிலேப் பள்ளிகளுக்கே அனுப்பப்படுகிருர்களே, இந்த முறையைத் தவிர்த்து அவர்கள் தொடர்ந்து கல்லூரிகளிலே பணியாற்றக் கூடிய வகையில் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தருகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த பயிற்றுநர் பதவிகளுக்குச் சென்றவர்கள் நீண்டகாலமாக அங்கேயே பணிபுரிகிருர்கள், அதே பதவியில் பணியாற்ற வேண்டிய நிலேமைதான் இருந்தது, அவர்கள் பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு வேண்டுமென்று கேட்டு பதவி உயர்வு தராத நிலே இருந்தது. ஆனல் இப்போது 15 பேர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்டதாகத் தெரிகிறது. இன்னும் அதிகமான பேர்களுக்குப் பதவி உயர்வுகள் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலேவர் அவர்களே, நாம் புதிய உத்தரவின்மூலம் 5 ஆண்டுக் காலம் பணி செய்தவர்களை எல்லாம் அந்தத் தகுதிகள் இருக்குமானல் உடனடியாகப் பதவி உயர்வு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்லூரிகளில் 10(ஏ) (1) விதியின்படி பலர் நியமிக்கப்பட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றியும்கூட பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் நியமனம் செய்யப்பட்டவர்கள் வருகிறபோது இவர்களை மாற்றிவிடுகிறார்கள், பிறகு மீண்டும் அரசு வேலையில் சேருவதற்கு வாய்ப்பு இல்லாத முறையில் அவர்களுடைய வயது வரம்பு அதிகமாகிவிடுகிறது. ஆகவே அவர்களையெல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பாமல் நேரடியாகவே ரெகுலரைஸ் செய்வதற்கான முறையில் விதி முறைகளைத் திருத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் மற்றவர்களும் 5, 6 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தாலும்கூட அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் தேறவில்லை என்ற காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள் என்பது உண்மையா ? இந்த ஆண்டு அப்படி எத்தனை பேர்கள் நீக்கம் செய்யப்பட்டார்கள் ? அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போட்டால் தகவல் அளிக்கலாம்.

*307. வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1973ஆம் ஆண்டில் அரசு கலைக்கல்லூரிகளில் தமிழ் பயிற்றுநர் (Tutors) பதவிகளுக்காக அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் நியமனம் செய்யப்பட்டார்கள் ?

(இ) இன்னும் எத்தனை பேர் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 120 பேர்கள். (ஆ) 103 பேர்கள். (இ) 17 பேர்கள்.